

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.11.2025) செங்கல்பட்டு மாவட்டம் மேலக்கோட்டையூர் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக் கழகத்தில் 5.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நீச்சல் குளத்தினை திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் அமைச்சர் தா.மோ. அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.11.2025) செங்கல்பட்டு மாவட்டம் விஐடி பல்கலைக் கழக கூட்டரங்கில் நடைபெற்ற மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி பகுதிகளுக்கு டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்களை வழங்கும் தொடக்க விழாவில் மாணவ, மாணவிகளிடம் விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்புகளை வழங்கினார். உடன் அமைச்சர் தா.மோ. அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் உள்ளனர்.

## மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளுக்கு கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழா:

# திறமையான விளையாட்டு வீரர்கள் எந்த மூலை முடுக்கில் இருந்தாலும், அவர்களை சாதனையாளர்கள் ஆக்குவோம்!

## செங்கல்பட்டில் நடைபெற்ற விழாவில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

***செங்கல்பட்டு, நவ. 21-***


***செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு, கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தை, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து வாழ்த்திப் பேசினார்.***

***இதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் என மொத்தம் 19 ஆயிரத்து 500 விளையாட்டு உபகரணத் தொகுப்புகள் வழங்கப்படவுள்ளன.***

***அப்போது அவர் ``திறமையான விளையாட்டு வீரர்கள் தமிழ்நாட்டின் எந்த மூலை முடுக்கில் இருந்தாலும், அவர்களைக் கண்டுபிடித்து, அவர்களையெல்லாம் சாதனையாளர்கள் ஆக்குகின்ற முயற்சியில் இந்த அரசும் நம்முடைய முதலமைச்சர் அவர்களும் மிகத் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறோம். தமிழ்நாட்டை விளையாட்டுத்துறையில் நம்பர் ஒன் ஆக்கிட என்றும் அயராது உழைப்போம்” என்று வாழ்த்துரை வழங்கினார்.***

***துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு: -***

*முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தை நகர்ப்புறங்களுக்கும் விரிவுபடுத்தும் வகையில், இன்று செங்கல்பட்டு மாவட்டத்தில் நடைபெறும் இவ்விழாவில் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.*




### சர்வதேச நீச்சல்குளம்

*இங்கே நம்முடைய தமிழ்நாடு உடற்கல்வி விளையாட்டுப் பல்கலைக்கழக மாணவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய மாணவர்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகள், மாணவச் செல்வங்கள் என பலரும் வந்திருக்கிறீர்கள். இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்கு முன்னர், இதே செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வி விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில், ரூ. 6 கோடி செலவில் கட்டப்பட்ட சர்வதேச நீச்சல்குளத்தையும் ரூ. 2 கோடி செலவில் அமைக்கப்பட்ட ஒலிம்பியன் சரத் கமல் டேபிள் டென்னிஸ் பயிற்சி மையத்தையும் திறந்துவைத்துவிட்டு, இந்த விளையாட்டு உபகரணங்களை வழங்குவதற்கு வந்திருக்கிறேன்.*

*நம்முடைய அரசு தொடர்ந்து விளையாட்டு வீரர்களுக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறது என்றால், உங்கள் தனித்திறமையால் இன்றைக்குத் தமிழ்நாட்டிற்குப் பதக்கங்களையும் பெருமையையும் நீங்கள் குவித்துக்கொண்டிருக்கிறீர்கள். அதற்காக இந்த அரசு தன் முழு முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. வந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் என் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

### கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்

*இங்கே நம்முடைய அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்கள் கூறியதுபோல, சென்ற ஆண்டு, 2024-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து 12 ஆயிரத்து 500 ஊராட்சிகளுக்கும் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன. அந்த வகையில், `கிராமங்களுக்கு மட்டும் கொடுத்திருக்கிறீர்கள். நகரங்களுக்கும் கொடுக்க வேண்டும்’ என்று இந்த ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஓர் ஆணையிட்டார்கள்.*

*இன்றைக்குத் தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 25 மாநகராட்சிகள், 145 நகராட்சிகள், 479 பேரூராட்சிகளுக்கும் சேர்த்து, 19 ஆயிரத்து 500 விளையாட்டு உபகரணங்களை இன்றிலிருந்து கொடுக்கத் தொடங்கி இருக்கிறோம். அதன் முதல் நிகழ்ச்சியாக, இன்றைக்கு செங்கல்பட்டு மாவட்டத்தில் இந்த விளையாட்டு உபகரணங்களை முதல் முறையாக வழங்குகிறோம்.*

*இந்த விளையாட்டு உபகரணங்களில், வெளி விளையாட்டுகளுக்குத் தேவையான கிரிக்கெட் தொடங்கி, உள் விளையாட்டுகளுக்குத் தேவையான கேரம், செஸ் என்று சுமார் 30 வகையான விளையாட்டுப் பொருட்கள் உங்களுக்கு வழங்கப்பட உள்ளன. இன்றைக்கு நம்முடைய அரசு மேற்கொண்டுவரும் தொடர் முயற்சி மற்றும் நடவடிக்கைகளால், ஏராளமான தமிழ்நாட்டு வீரர்கள் பல்வேறு சாதனைகளை உலகம் முழுவதும் படைத்துக் கொண்டிருக்கிறார்கள்.*

*முக்கியமாக, இரண்டு பேர் இன்று இந்த மேடையில் உங்கள்முன் அமர்ந்திருக்கிறார்கள். பாரா பாட்மிண்டன் விளையாட்டில் பல்வேறு சாதனைகளை படைத்துக்கொண்டிருக்கக்கூடிய தம்பி ஜெகதீஷ் டில்லி அவர்கள் இங்கே வந்திருக்கின்றார்.*

### உலகத் தரவரிசைப் பட்டியல்

*ஜெகதீஷ் டில்லியைப் பொறுத்தவரை, இன்றைக்கு உலக அளவில் பாரா பாட்மிண்டன் இரட்டையர் பிரிவில் உலகத் தரவரிசைப் பட்டியலில் முதல் இடத்தில் இருக்கிறார். ஆடவர் ஒற்றையர் பிரிவில் இன்றைக்கு உலக அளவில் ஐந்தாவது இடத்தில் இருக்கிறார். அவர் 2015 - ஆம் ஆண்டு முதல் பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் 60-க்கும் அதிகமான பதக்கங்களை வென்றிருக்கிறார். விரைவில் அவர் தன்னுடைய நூறாவது பதக்கத்தை வெல்லவும், அதையும் தாண்டிப் பல வெற்றிகளைக் குவிக்கவும், நாம் அனைவரும் நம் வாழ்த்துகளைக் கைத்தட்டல்கள் மூலம் தெரிவித்துக்கொள்வோம்.*

*அவரைப் போலவே இன்னொரு விளையாட்டு வீரரும் இங்கே வந்திருக்கிறார். செஸ் விளையாட்டு வீரர் தம்பி இளம்பரிதி இங்கே வந்திருக்கின்றார். தம்பி இளம்பரிதி, இந்தியாவின் 90-வது செஸ் கிராண்ட் மாஸ்டர். அதேபோல், தமிழ்நாட்டின் 35-வது கிராண்ட் மாஸ்டர். 4 வயதில் செஸ் விளையாடத் தொடங்கிய தம்பி இளம்பரிதி, இன்றைக்கு இந்தியாவிலேயே மிக இளம் வயதுடைய கிராண்ட் மாஸ்டர் என்றால், அது தம்பி இளம்பரிதி அவர்கள்தான்.*




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.11.2025) செங்கல்பட்டு மாவட்டம் மேலக்கோட்டையூர் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக் கழகத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள டேபிள் டென்னிஸ் உயர் செயல்திறன் மையத்தை திறந்து வைத்து பார்வையிட்டார்.

*இன்றைக்கு உலகம் முழுவதும் பல்வேறு போட்டிகளில் கலந்துகொண்டு, பல பதக்கங்களை வென்று இந்தியாவிற்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிறார். அவருக்கும் நாம் அனைவரும் நம்முடைய கைத்தட்டல்கள் மூலம் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்வோம்.*

*இன்றைக்கு விளையாட்டில் சாதித்துக் கொண்டிருக்கின்ற இந்த இரண்டு பேரும், நம் அனைவருக்கும் ஒரு ரோல் மாடலாக திகழ்கிறார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள். இவர்களுடைய வெற்றிப் பயணம் தொடர, நம்முடைய தமிழ்நாடு அரசு என்றைக்கும் துணை நிற்கும். அவர்களைப் போல இன்றைக்கு நிறைய வீரர்கள் உருவாக வேண்டும் என்றுதான் இந்த கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் திட்டத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்து, நாம் அதைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.*

### ஏன், கலைஞர் பெயர்?

*இந்தத் திட்டத்திற்குக் கலைஞர் அவர்களின் பெயரை ஏன் வைத்தோம் என்றால், அவருக்கு விளையாட்டில் இருந்த ஆர்வத்தின் காரணமாகத்தான். அரசியல் தலைவராக கலைஞர் அவர்கள் இருந்தாலும், மிகப் பெரிய ஒரு விளையாட்டு வீரராகவும் (Sportsman) இருந்தார். கால்பந்து, கிரிக்கெட் எந்தப் போட்டிகள் நடந்தாலும், அதில் அவருக்கு பெரிய அளவில் ஆர்வம் இருக்கும். அவற்றைத் தவறாமல் பார்த்துவிடுவார். தன்னுடைய உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும்போது கூட, விளையாட்டு சார்ந்த உதாரணங்களை நிறைய எழுதுவார். குறிப்பாக, `நீண்ட தூரம் ஓடினால்தான் அதிக உயரம் தாண்ட முடியும்’ என்று கலைஞர் அவர்கள் அடிக்கடி சுட்டிக்காட்டிப் பேசுவார்.*

*எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும், எல்லாரிடமும் ஒற்றுமை உணர்வும், சகோதரத்துவமும் வளரவேண்டும் என்றால், அதற்கு ஸ்போர்ட்ஸ் மென்ஷிப் எனப்படும் விளையாட்டு மனப்பான்மை மிக மிக முக்கியம். ஏனென்றால், விளையாட்டைப் பொறுத்தவரைக்கும் ஒரு குழுவில் (Team) இருக்கக்கூடிய அனைவரும் ஒரே சீருடையை (ஜெர்ஸி) போட்டுக்கொள்வதால், அவர்கள் எல்லோரும் ஒன்றாகிவிடுவார்கள். அவர்களுக்குள் இருக்கக்கூடிய மத வேறுபாடு, சாதி வேறுபாடு, பொறாமை எல்லாமே மறைந்து போய்விடும். அதுதான் விளையாட்டுக்கே இருக்கக்கூடிய மிகப் பெரியதொரு வலிமை.*

*திறமையான விளையாட்டு வீரர்கள் தமிழ்நாட்டின் எந்த மூலை முடுக்கில் இருந்தாலும், அவர்களைக் கண்டுபிடித்து, அவர்களையெல்லாம் சாதனையாளர்கள் ஆக்குகின்ற அந்த முயற்சியில் இந்த அரசும் நம்முடைய முதலமைச்சர் அவர்களும் மிகத் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறோம். இது மாதிரியான திறமையாளர்களைக் கண்டறியத்தான் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை வருடந்தோறும் நடத்துகிறோம். கடந்த நான்கு ஆண்டுகளாக, இதுவரை இல்லாத அளவில் அதிகம் பேர் கலந்துகொண்ட ஒரு போட்டி என்றால், அது தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைப் போட்டிதான். அதுவும் செங்கல்பட்டு மாவட்டம் மிக மிக முக்கியமான சிறப்புக்குரிய மாவட்டம். ஏனென்றால், ஒவ்வொரு வருடமும், பதக்கப் பட்டியலில் முதல் இடத்தில் சென்னையும், இரண்டாம் இடத்தில் நம் செங்கல்பட்டு மாவட்டமும் ஒவ்வொரு வருடமும் அந்தச் சாதனையைப் படைத்துக் கொண்டிருக்கிறீர்கள். இந்த வருடமும் இரண்டாமிடம். அடுத்த வருடம் நிச்சயமாக முதல் இடத்திற்கு முயற்சி செய்வீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.*

### இளம் விளையாட்டு வீரர்கள்

*தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைப் போட்டியின் மூலமாகக் கண்டறியப்படுகின்ற அந்த இளம் விளையாட்டு வீரர்களுக்கு முறையான பயிற்சியையும் நம்முடைய அரசு அளிக்கின்றது. தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலமாக, நிதி உதவி, விளையாட்டு உபகரணங்கள் கொடுத்து, எந்தவிதமான உதவி தேவையோ, அத்தனை உதவிகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் விளையாட்டு வீரர்களுக்குத் தொடர்ந்து கொடுத்து ஊக்கப்படுத்தி வருகின்றார்.*

*விளையாட்டுப் போட்டிகளில், அது சர்வதேச, தேசிய அளவில் இருந்தாலும் சரி, வெற்றி பெற்று வந்தவுடனே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, அவர்களுக்கு உயரிய ஊக்கத்தொகையை, எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு அதிகமாக உடனடியாக நம்முடைய முதலமைச்சர் அவர்களே கொடுத்திருக்கிறார்.*

*தொடர்ந்து சாதனை படைக்கின்ற வீரர்களுக்கு, இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, முதன்முறையாக அதிக அளவில் 3% இட ஒதுக்கீட்டின் கீழ், ஒவ்வொரு விளையாட்டு வீரர்களுக்கும் அரசுப் பணிகளை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்து வருகின்றார்.*

### 100 வீரர்களுக்கு அரசு வேலை

*இதுவரைக்கும் பல மாநிலங்களில் இல்லாத அளவு, முக்கியமாக தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு, சென்ற வருடம் நம்முடைய இலக்கு 100. சொன்னதுபோல, 100 விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலை வாய்ப்புகளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார். வருகின்ற ஆண்டும், முதலமைச்சர் அவர்கள் எங்கள் துறைக்கு ஒரு இலக்கு கொடுத்திருக்கிறார். இந்த ஆண்டும் 100 விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலை கொடுக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார். அந்தப் பணியிலும் நம்முடைய துறை ஈடுபட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, பல்வேறு சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளையும் நம்முடைய அரசு தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறது. இப்போது இரண்டு நாள்களுக்கு முன்பு தொலைக்காட்சியில், செய்தியில் பார்த்திருப்பீர்கள். முதன்முறையாகச் சென்னையில் இ- ஸ்போர்ட்ஸ் சாம்பியன் ஷிப் போட்டியை ஒரு வார காலம் நடத்தினோம்.*

*இன்னும் ஒரு வாரத்தில், தமிழ்நாட்டில் முதன்முறையாக மென்ஸ் ஜூனியர்ஹாக்கி உலகக் கோப்பைப் போட்டிகளைச் சென்னையிலும், மதுரையிலும் நடத்த இருக்கிறோம். உலக அளவில் 24 குழுக்கள் இந்தப் போட்டிகளில் பங்கேற்க இருக்கிறார்கள். நவம்பர் 28-ஆம் தேதி முதல் டிசம்பர் 10-ஆம் தேதி வரை இப்போட்டிகள் சென்னையிலும், மதுரையிலும் நடக்க இருக்கின்றன. சென்னையில் இருக்கக்கூடிய மேயர் ராதா கிருஷ்ணன் விளையாட்டு அரங்கம் புதுப் பொலிவுடன் தயாராகிக் கொண்டிருக்கிறது. அதேபோல், மதுரையில் சர்வதேச அளவில் புதிய ஹாக்கி ஸ்டேடியம் பணிகளும் நடந்துகொண்டிருக்கின்றன.*

*இவற்றையெல்லாம் ஏன் செய்கிறோம் என்றால், இன்றைக்கு விளையாட்டில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் இடத்தைப் பிடிக்க வேண்டும் என்ற ஒரே இலக்குடன்தான் இந்தப் பணிகளையெல்லாம் செய்துகொண்டிருக்கிறோம். ``இந்தியாவின் தலைசிறந்த வீரர்கள் எல்லோரும் தமிழ்நாட்டில்தான் இருக்கின்றார்கள்” என்ற ஒரு நிலைமை ஏற்பட வேண்டும், என்பதுதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய, அரசின் ஒரே எண்ணம். அதற்கான முயற்சிகளில் ஒன்றுதான், இப்போது கொடுக்கப்படுகின்ற இந்த கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம்.*

### அனைவருக்கும் ஒரு வேண்டுகோள்!

*இந்த விளையாட்டு உபகரணங்களை எல்லோரும் நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். முக்கியமாக, அதை நன்றாகப் பராமரியுங்கள். வந்திருக்கக்கூடிய உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உங்கள் அனைவருக்கும் ஒரு வேண்டுகோள். இங்கு இருக்கக்கூடிய விளையாட்டு உபகரணங்களை விளையாடக்கூடிய வீரர்களுக்குப் பகிர்ந்து கொடுங்கள், அவற்றைப் பராமரியுங்கள். வந்திருக்கக்கூடிய அரசு அதிகாரிகள் அவற்றை சரியாக ஆய்வு செய்து பராமரியுங்கள்.*

*உங்கள் பகுதியில் இருக்கக்கூடிய இளம் வீரர்களைக் கண்டுபிடித்து, அவர்களை நீங்கள் ஊக்கப்படுத்த வேண்டும். இன்னும் அதிகமான விளையாட்டு வீரர்கள் உங்களுடைய பகுதியிலிருந்து வரவேண்டும் என்று உங்களையெல்லாம் நான் கேட்டுக்கொள்கிறேன்.*

*இறுதியாக, கலைஞர் விளையாட்டு உபகரணங்களைப் பெற்றுக்கொண்டுள்ள செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து இளைஞர்கள், விளையாட்டு வீரர்கள், மாணவச் செல்வங்கள் உங்கள் அனைவருக்கும் மீண்டும் என் வாழ்த்துகளைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.*

*இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை வழங்கினார்.*

### பங்கேற்றவர்கள்

*அமைச்சர் தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, இ. கருணாநிதி, விஜயலட்சுமி மதுசூதனன், மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர்கள் படப்பை மனோகரன், செம்பருத்தி துர்கேஷ், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் மேகநாத் ரெட்டி ஐ.ஏ.எஸ்., வி.ஐ.டி பல்கலைக்கழகத்தின் துணைத் தலைவர் செல்வம், மாவட்ட ஆட்சியர் சினேகா ஐ.ஏ.எஸ்., மாநகராட்சி ஆணையர் பாலச்சந்தர் ஐ.ஏ.எஸ்., சர்வதேச பாரா பாட்மிண்டன் வீரர் ஜெகதீஷ் டில்லி, செஸ் கிராண்ட் மாஸ்டர் இளம்பரிதி, உள்ளாட்சி பிரதிநிதி கள், அரசு அதிகாரிகள் அலுவலர்கள் மற்றும் கழக முன்னணியினர் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.*